**செய்தி வெளியீடு எண் : 670** **நாள் : 07.04.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை பெருநகர பகுதியில் 26 சட்டமன்றத் தொகுதிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதியில் மேம்படுத்தப்படும் பணிகள் குறித்து**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி சென்னை பெருநகர பகுதியில் 26 சட்டமன்றத் தொகுதிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (CMDA) நிதியில் மேம்படுத்தப்படும் பணிகள் குறித்து இன்று (7.4.2023) சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற கூட்டத்தொடர் அறிவிப்புகள் 2023-2024 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) மற்றும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம் (CUMTA) தொடர்பான புதிய அறிவிப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணைய சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், சென்னை மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.அன்பு ஆபிரகாம் அவர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in